[1987 நவம்பர் 10

கோவில்பட்டி தொகுதியிலிருக்கும் பாக்கி கிராமங்களுக்கும் தனி பம்பு போட்டு தண்ணீர் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்திலே எல்லா அதிகாரி களையும் கலந்து செய்ய வேண்டி இருக்கிறது. ஆகவே, சீவலப் பேரியிலே குடிநீர் திட்டத்தை கோவில்பட்டி நகராட்சி எடுத்துக் கொண்ட பிறகு மற்ற வேலைகள் தொடர்ந்து நடைபெறும்.

குறிச்சி பேரூராட்சி பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல்.

8—(*வினா எண். 11990) **திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், குறிச்சி பேரூராட்சி மற்றும் அதனை சார்ந்த பகுதிகளுக்கு குடிநீர் வழங்கிட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், குறிச்சி பேரூராட்சி பகுதிகளுக்கு, 1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் சிறுவாணி திட்டத்திலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. அதனை சார்ந்த புதிதாக ஏற்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்க பேரூராட்சியிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றதும் பரிசீலிக்கப் படும்.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, குறிச்சி பேரூராட்சி மன்றத்திற்கு 1982 ஆம் ஆண்டு சிறு வாணி திட்டத்தின்மூலம் திட்டமிடப்பட்டு தண்ணீர் வழங்குவ தாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், ஏற் கெனவே அந்தப் பகுதியில் நீண்ட காலமாக விரிவுபடுத்தப் படாத, ஏற்கெனவே அந்தப் பகுதியில் இருந்த ஆற்றுப்பாலம், சீனிவாசபுரம், அண்ணாநகர், அண்ணாபுரம், கார்மல் நகர் ஆகிய சீனிவாசபுரம், அண்ணாநகர், அண்ணாபுரம், காமல் நகர் ஆகிய பகுதிகளுக்கும் குறிச்சி அவுசிங் யூனிட்டிலே இருக்கக்கூடிய ஃபேஸ்-1, ஃபேஸ்-2 ஆகிய பகுதிகளில் பேரூராட்சி மன்றம் பணம் செலுத்தியும் அதற்குத் தேவையான ஆட்களை நியமிக்காமல்,

1987 நவம்பர் 10]

அந்தப் பகுதிகளுக்கு இன்னமும் குடிநீர் வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புவதோடு, அதைப்போல ஜி. கே. எஸ். நகரிலும் பணம் கட்டப்படும் அங்குள்ளவர்களுக்கும் இன்னமும் தண்ணீர் கொடுக்கப்படாமல், அங்கே ஆண்டுக்கணக்கிலே தண்ணீர் கிடைக்காமல் பொது மக்கள் மிகுந்த வேதனையோடு இருப்பதை அரசு அறியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பிரச்சினைகள் பல்வேறு கிராமங்களிலே இருந்து வருகின்றன. ஆனால் வறட்சி வேலைகளிலே குடிநீர் வடிகால் வாரியம் வேகமாக கவனத்தைச் செலுத்த வேண்டியிருந்த காரணத்தினாலே, எல்லா வேலைகளையும் செய்து கொண்டிருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற, குறிச்சி பேரூராட்சிக்கு உட்பட்ட சில ஊர்களுக்கு தண்ணீர் தராமல் இருப்பதற்குக் காரணம், பேரூராட்சியிலிருந்து தீர்மானம் ஆரம்பத்திலே கிடைக்கப்பெறவில்லை. அதற்குப் பிறகுதான் அவர்கள் பணத்தைக் கட்டியிருக்கிறார்கள். எனவே இப்போது பணத்தைக் கட்டியிருப்பதால் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று குடிநீர் வடிகால் வாரியம் அறிவித்துள்ளது.

(முற்பகல் 10-20)

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வாங்கப்பட வேண்டிய குழாய்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படாத காரணத்தால்தான் கடந்த 7 மாத காலமாக, பணம் கட்டப்பட்டும்கூட அந்தப் பகுதிகளில் பணிகள் தடங்கல் பட்டுள்ளன என்றும், கடந்த 15 நாட்களுக்கு முன்னால்தான் குழாய்களுக்கான விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. எனவே இப்படி குழாய்களுக்கான விலையை நிர்ணயிப்பதில் தாமதம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான காரணங்கள் தற்போது என்னிடம் இல்லை. ஆனாலும், அப்படிப்பட்ட தாமதங்களைத் தவிர்ப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.